**முதன்மை சார்பு நீதிமன்றம், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : வா.தீபா, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, திண்டுக்கல்.**

**2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாள் வியாழக்கிழமை**

**HMOP No.157/2023**
**(CNR No. TNDG040016052023)**

-----------

திருமதி. சீரங்கவள்ளி ..... மனுதாரர்

/எதிர்/

திரு. முத்துப்பாண்டி ..... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 17.08.2023-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 12.11.2024-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.K.முத்துராமலிங்கம் மற்றும் திரு. K.உதயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பு இல்லாததாலும் எதிர்மனுதாரரை எதிரவரில்லா நிலைக்குட்படுத்தப்பட்டும், மனுதாரர் தரப்பில் ஆற்றிய வாதுரைகளைக் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**ஆணையுரை**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005-ஆம் தேதி அய்யம்பாளையத்தில் உள்ள வாசுகி திருமண மஹாலில் வைத்து நடந்த திருமணத்தை ரத்து செய்யக்கோரி, இந்து திருமணச்சட்டம் பிரிவு.13(1)(ia)-ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02.மனுதாரரின் மனு உரை சுருக்கம்.**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005 ம் தேதி அய்யம்பாளையத்தில் உள்ள வாசுகி திருமண மஹாலில் வைத்து பெரியோர்கள் மற்றும்

உறவினர்கள் முன்னிலையில் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் 10 பவுன் நகையும், ரூ.2,00,000/– மதிப்பிலான சீர்வரிசை பொருட்களும் எதிர்மனுதாரருக்கு 2 பவுனில் செயின் ஒன்றும், 1/2 பவுன் மோதிரமும் சீர்வரிசையாக செய்துள்ளனர். திருமணத்திற்கு பின்பு மனுதாரரும் எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் வீட்டில் வாழ்ந்து வந்தனர். மேற்படி திருமணத்தின் பயனாக மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கிரிபிரசாத் மற்றும் பிரசன்னா என்ற இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். இதில் இரண்டாவது மகன் மனவளர்ச்சி குன்றியவர், தற்போது அவரை நிலக்கோட்டை மனவளர்ச்சி குன்றியோருக்கான காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். திருமணமானது முதற்கொண்டு எதிர்மனுதாரர் எந்தவேலைக்கும் செல்லாமல், மனுதாரர் அவரது பெற்றோர்களிடம் இருந்து அதிகப்படியான சீர்வரிசை மற்றும் வரதட்சனைகள் பெற்றுவரவில்லை என்பதை மனதில் வைத்துக்கொண்டு தினமும் பிரச்சனை செய்தும் மனுதாரரை அடித்து அசிங்கமாக பேசி கொடுமை செய்வதையும் வாடிக்கையாக கொண்டுள்ளார்.

பின்னர் மனுதாரரின் குடும்பத்தினர் மனுதாரரையும் எதிர்மனுதாரரையும் சமரசம் செய்து வைத்தனர். எனினும், எதிர்மனுதாரர் மீண்டும் வேலைக்கு செல்லாமல் தினமும் குடிக்க பணம்கேட்டு துன்புறுத்தியும், மனுதாரரின் நகைகளை பிடிங்கி அடகு வைத்தும் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தார். மேலும், வரதட்சணை கேட்டு மனுதாரரை இரவில் அடித்து கொடுமைப்படுத்தி வந்தார். தன் இரண்டு பிள்ளைகளுக்காக மனுதாரர் எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்தார். பின்னர் மேற்படி பிரச்சனை சம்மந்தமாக உறவினர்களை வைத்து சமரசம் பேசியத்தில் தான் இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ளமாட்டேன் என்று சொன்னதன் அடிப்படையில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தார் எனினும் எதிர்மனுதாரர் தனது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளாமல் தினமும் கொடுமைகள் செய்து வந்தார். கடந்த 10.05.2023 ம் தேதி எதிர்மனுதாரர் மனுதாரை அடித்து வீட்டை விட்டு விரட்டி விட்டார், தற்போது மனுதாரர் அதே ஊரில் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து கஷ்ட ஜீவனம் செய்து வாழ்ந்து வருகிறார்.

மேலும் மனுதாரர் தன் கணவருக்கு செய்யவேண்டிய அனைத்து கடமைகளையும் முறையாக செய்து வந்தார். ஆனால், எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் மனுதாரருக்கோ அல்லது குழந்தைக்கோ செய்யவேண்டிய அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்யவில்லை. மேலும் மனுதாரருடன் எதிர்மனுதாரர் கடந்த சிலமாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். இனிமேலும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதில் எந்தவித சாத்தியமும் இல்லை. மேலும் மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 17.06.2015-ம் தேதி ஏற்பட்ட திருமண உறவை ரத்து செய்ய விவாகரத்து பரிகாரம் கோரி (divorce) இம்மனுவியை தாக்கல் செய்துள்ளார்.

03. எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பு இல்லாததாலும் எதிர்மனுதாரரை எதிரவரில்லா நிலைக்குட்படுத்தப்பட்டும் எதிர்மனுதாரருக்கெதிராக ஒருதலைப்பட்ச ஆணை பிறப்பிக்கப்பட்டது.

04.**<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**.

01.இம்மனு அனுமதிக்கப்படவேண்டுமா? என்பதேயாகும்.

05. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ம.சா.ஆ.1 என்பது மனுதாரர், எதிர்மனுதாரர் திருமணத்தின்போது எடுத்த புகைப்படமாகவும், ம.சா.ஆ.2 என்பது முதல் மகன் கிரிபிரசாத்தின் பிறப்பு சான்றிதழாகவும், ம.சா.ஆ.3 என்பது இரண்டாவது மகன் பிரசன்னாவின் பிறப்பு சான்றிதழாகவும், ம.சா.ஆ.4 என்பது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையாகவும் உள்ளது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்பது ம.சா.ஆ.1 திருமணபுகைப்படம் பரிசீலனையிலும், உபய தரப்பினர்கள் மேற்கொண்ட இல்லறத்தின் பயனாக இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்துள்ளது என்பது ம.சா.ஆ 2 மற்றும் ம.சா.ஆ 3-ன் பிறப்பு சான்றிதழ்களின் பிரிசீலினையிலும், எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்பு வேலைக்கு செல்லாமலும்,

குடிக்க பணம் கேட்டும், மனுதாரை சந்தேகப்பட்டு அசிங்கமாக பேசியும், அடித்து துன்புறுத்தியும், கொண்டு வந்த வரதட்சணை போதாது இன்னும் வாங்கி வரும்படி அடித்து துன்புறுத்துவதையும் வாடிக்கையாக கொண்டுள்ளார், மேலும், மனுதாரருடன் வாழ மறுத்தும், அசிங்கமாக திட்டியும், அவமானப்படுத்தியும் மனதளவிலும் உடலளவிலும் பல கொடுமைகள் செய்துள்ளார் என்பதும், அதனால் இனியும் சேர்ந்து வாழும் சூழ்நிலை இல்லை என்பதாலேயே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதும் ம.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தின் பரிசீலனையிலும் அறிய முடிகிறது.

06. எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பு இல்லாததாலும் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார். இன்றுவரை தோன்றாத்தரப்பினராகவே இருந்து வருகிறார். எதிர்மனுதாரர் தன் தரப்பில் சாட்சியங்களையோ, சான்றாவணங்களையோ முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி ம.சா.1–ன் முதல் விசாரணை மற்றும் வாய்மொழி சாட்சியம், மனுவுரையின்படி மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனிமேல் கணவன் மனைவியாக ஒன்றாக இணைந்து வாழும் சூழ்நிலை இல்லை என்றும், அவ்வாறு வாழும் நிலையில், இருவருக்குமிடையே கருத்தொற்றுமை ஏற்படாது என்றும் ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்திலேயே நிரூபணமாகிறது. எனவே, மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரத்தை மனுதாரருக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005–ஆம் தேதியன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து தீர்வு காண்கின்றது.

**07. முடிவில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையும், ஆணையுரையும் வழங்கப்படுகிறது.**

01. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005–ஆம் தேதி அய்யம்பாளையத்தில் உள்ள வாசுகி திருமண மஹாலில் வைத்து இந்து முறைப்படி நடந்த திருமணத்தை இந்து திருமண சட்டம் பிரிவு 13(1)(ia)ன் கீழ் ரத்து செய்து

மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரத்தை மனுதாரருக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

02. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த ஆணையுரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2024.12.31 18:15:35 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டுக்கல்.

**1.மனுதாரர் தரப்பு சாட்சியங்கள்.**

ம.சா.1. திருமதி. சீரங்கவள்ளி (மனுதாரர்)

**02.மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | திருமண புகைப்படம் – அசல் |
| ம.சா.ஆ.2 | 22-07-2006 | கிரிபிரசாத்-ன் பிறப்பு சான்றிதழ் – ஒளி நகல் |
| ம.சா.ஆ.3 | 29-01-2008 | பிரசன்னா-வின் பிறப்பு சான்றிதழ் – ஒளி நகல் |
| ம.சா.ஆ.4 | - | மனுதாரர் ஆதார் அடையாள அட்டை – ஒளி நகல் |

03.**எதிர்மனுதார் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்.** இல்லை.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2024.12.31 18:15:41 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டுக்கல்.

முதன்மை சார்பு நீதிமன்றம்,
திண்டுக்கல்.
HMOP No.157/2023
ஆணையுரை (வரைவு/தெளிவு)
நாள். 19.12.2024

**முதன்மை சார்பு நீதிமன்றம், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : வா.தீபா, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, திண்டுக்கல்.**

**2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாள் வியாழக்கிழமை**

**<u>HMOP No.157/2023</u>**
**(CNR No. TNDG040016052023)**
-----------

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம், 3 வது வார்டு, ரெங்கசாமி சேர்வை தெரு என்ற முகவரியில் வசித்து, தற்போது திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம், சாம்ணா நகர் என்ற முகவரியில் வசிக்கும் பிச்சைமுத்து மகள் இந்து, சுமார் 39 வயதுள்ள சீரங்கவள்ளி. ..... மனுதாரர்

/எதிர்/

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம், 3 வது வார்டு, ரெங்கசாமி சேர்வை தெரு, கதவு எண்.3–1–13 என்ற முகவரியில் வசிக்கும் பாண்டி மகன் இந்து, சுமார் 41 வயதுள்ள முத்துப்பாண்டி. ..... எதிர்மனுதாரர்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005–ஆம் தேதி அய்யம்பாளையத்தில் உள்ள வாசுகி திருமண மஹாலில் வைத்து நடந்த திருமணத்தை ரத்து செய்யக்கோரி, இந்து திருமணச்சட்டம் பிரிவு.13(1)(ia)–ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்</u>**. 17.08.2023

**<u>மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</u>**. 30.08.2023

இம்மனுவானது 17.08.2023–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 12.11.2024–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.K.முத்துராமலிங்கம் மற்றும் திரு. K.உதயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பு இல்லாததாலும் எதிர்மனுதாரரை எதிரவரில்லா நிலைக்குட்படுத்தப்பட்டும், மனுதாரர் தரப்பில் ஆற்றிய வாதுரைகளைக் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இது நாள் வரை

இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

**உத்தரவாணை**

01. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.06.2005–ஆம் தேதி அய்யம்பாளையத்தில் உள்ள வாசுகி திருமண மஹாலில் வைத்து இந்து முறைப்படி நடந்த திருமணத்தை இந்து திருமண சட்டம் பிரிவு 13(1)(ia)ன் கீழ் ரத்து செய்து மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரத்தை மனுதாரருக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

02. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2024.12.31 18:15:47 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திண்டுக்கல்.

முதன்மை சார்பு நீதிமன்றம்,
திண்டுக்கல்.
HMOP No. 157/2023
உத்தரவாணை
நாள். 19.12.2024